# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை),
# தருமபுரி.

ந.க.எண். 021/2017/பி2

நாள் 23.03.2017

## சுற்றறிக்கை / சிறப்பு கவனம்

பொருள் : கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம் - 2016-18-ம் ஆண்டுக்குரிய குடும்ப நல நிதிக்கான முன்பிரிமியத் தொகை செலுத்துதல் - அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. பதிவாளர் சென்னை சுற்றறிக்கை நக எண் 18/2012 மற்றும் நக எண் 28936/2012 /PMCT (1) நாள் 06.07.2012.
2. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நக எண் 20643/ P&D /2013-14 நாள் 20.03.2017.

--00--

பார்வை 1ல் காணும் பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கையில் அனைத்து கூட்டுறவு கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் நிரந்தர (Regular) பணியாளர்களுக்கு குடும்ப நலநிதிக்கான குழுக்காப்பீட்டுத் திட்டம் 01.05.1983 முதல் நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பணியின் போது இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு LIC மூலம் குடும்ப நலநிதியாக ரூ.2,00,000/ வழங்கப்பட்டு வருகிறது.

பார்வை 2ல் காணும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் கடிதத்தில் அனைத்து கூட்டுறவு சங்கங்கள் / நிறுவனங்கள் தங்களது பணியாளர்களுக்கு 2017-18ம் ஆண்டுக்குரிய குழுக்காப்பீட்டுத் திட்ட முன்பிரிமியத் தொகையாக ரூ.1230/- மற்றும் 15% சேவை வரி என மொத்தம் ரூ.1415/-ஐ (பணியாளர் பங்கு ரூ.707.50/- மற்றும் சங்க பங்கு ரூ.707.50/-) வங்கியின் மூலம் வசூல் செய்து எல்ஐசி சென்னை நிறுவனத்திற்கு உரிய காலக்கெடுவுக்குள் தவறாமல் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கூட்டுறவு சங்கங்கள் /நிறுவனங்கள் தங்களது பணியாளர்களுக்கான முன்பிரிமியத் தொகை ரூ.1415/-ஐ கிளையில் செலுத்தி அவைகளின் விவரங்களை இத்துடன் இணைத்துள்ள விவரப்பட்டியலில் தெரிவித்து (Annexure – 1) அதனையும் செலுத்துச் சீட்டையும் (சலான்) ஒன்றிணைத்து தங்களுக்கு தொடர்புடைய மத்திய வங்கி கிளையில் **30.04.2017-க்குள்** செலுத்த வேண்டும்.

கிளை மேலாளர்கள் மற்றும் காசாளர்கள் பிரிமியத் தொகையை சங்கங்களிடமிருந்து பெறும்போது பிரிமியம் தொகைக்கான விவரப்பட்டியலை தவறாமல் பெறுதல் வேண்டும். அவ்வாறு பெறப்படும் பிரிமியத் தொகையை கிளை அளவில் **Family Benefit Fund Received PACS G.L. No. 9132041101003** என்ற கணக்கில் மட்டும் வரவு வைக்க வேண்டும். வரவு வைக்கும் பொழுது NARRATION-லில் சம்மந்தப்பட்ட கூட்டுறவு சங்கம் / நிறுவனத்தின் பெயரை தவறாமல் பதிவு செய்தல் வேண்டும். முன்பிரிமியத் தொகையை கணினியில் வரவு வைத்த அன்றைய தினமே Annexure – 1 மற்றும் செலுத்துச்சீட்டின் நகலை (சலான்) தலைமையகத்தின் நிறுவனப்பிரிவுக்கு (பி2) தவறாமல் அனுப்புதல் வேண்டும். தவறும் நேர்வில், இந்நிகழ்வால் ஏற்படும் நிதி இழப்புக்கு சம்பந்தப்பட்ட கிளையே பொறுப்பேற்க வேண்டியுள்ளது.

எனவே, அனைத்து கிளை மேலாளர்கள் கள மேலாளர்கள் மற்றும் சரகமேற்பார்வையாளர்கள் தங்களது கிளைக்கு அணைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் / நிறுவனங்களுக்கு இத்தகவலை தெரிவித்து குடும்பநல நிதிக்கான பிரிமியத் தொகையை 30.04.2017-க்குள் வங்கியின் கிளையில் செலுத்த அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- கி.ரேணுகா
இணைப்பதிவாளர் /மேலாண்மை இயக்குநர்.

இணைப்பு - மேற்கண்டவாறு,

பெறுதல்,

1. அனைத்து தொடக்க சங்கங்கள் ( கள மேலாளர்கள் மூலமாக).
2. அனைத்து பணியாளர் கூட்டுறவு சங்கங்கள். ,,
3. அனைத்து தொழிற் கூட்டுறவு சங்கங்கள். ,,
4. அனைத்து வீடுகட்டும் கூட்டுறவு சங்கங்கள். ,,
5. அனைத்து நில வள வங்கிகள்.
6. அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகள்.
7. அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள். (கிளை மேலாளர் மூலம்)
8. தருமபுரி மாவட்ட நுகர்வோர் மொத்த உற்பத்தியாளர் பண்டகசாலை,
9. நெசவாளர் கூட்டுறவு சங்கம். (கள மேலாளர் மூலம்)
10. வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம். அரூர்/கிருஷ்ணகிரி /பென்னாகரம் /காவேரிப்பட்டினம் /கெலமங்கலம் /ஊத்தங்கரை. (கள மேலாளர் மூலம்)
11. மாவட்ட வேளாண்மை பொறியியல் பணியாளர் கூட்டுறவு சங்கம். தருமபுரி. (கள மேலாளர் மூலம்)
12. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பாலக்கோடு / அரூர்.
13. கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை.
14. இதர கூட்டுறவு சங்கங்கள். (கள மேலாளர் மூலம்)
15. உதவியாளர், பி1 பிரிவு - இவர் வங்கிப்பணியாளர்களுக்கான வங்கி + பணியாளர்கள் பிரிமியம் பிடித்தம் செய்ய உரிய அனுமதி பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

நகல்,

1. அனைத்து கிளை மேலாளர்கள் ( அனைத்து கிளைகளிலும் உள்ள அறிவிப்பு பலகையில் விளம்பரம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது)
2. அனைத்து மேலாளர்கள், தலைமையகம்.
3. துணைப்பதிவாளர், தருமபுரி / கிருஷ்ணகிரி / ஓசூர் - தகவலுக்காக.
4. இணைப்பதிவாளர் அவர்கள், தருமபுரி / கிருஷ்ணகிரி - தகவலுக்காக.
5. இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், பொது மேலாளர் மற்றும் துணைப்பதிவாளர் / முதன்மை வருவாய் அலுவலர் மேசைக்கு.
6. துணைப்பதிவாளர், பால்வளம், தருமபுரி.
7. தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாள் கூட்டுறவு ஒன்றியம், கிருஷ்ணகிரி.

/உண்மை நகல் /

மேலாளர் (நிறுவனம்)
23 3 17